2013 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 335, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

335—

கூடுதல் கட்டடம்

***26522—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனை, அனைத்து நவீன வசதிகளும் கொண்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகும். இம்மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் அரசுக்கு தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் அன்னை தெரசாவாகத் திகழும் தாயே! மாற்றம் தந்த மக்களுக்கு மருத்துவத் துறையில் தினம் தினம் ஏற்றம் தரும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டை தொகுதி, மழையூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டையில் பெண்களுக்கு விடிவெள்ளியாகப் பிறந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் பெயரிலே இயங்கி வரும் புதுக்கோட்டை அரசு தலைமை*

மருத்துவமனையில் போதிய இட வசதி இல்லாததால், நோயாளிகளின் நலன் கருதி, அதனை விரிவாக்கம் செய்து, தரம் உயர்த்தித் தர வேண்டும். அங்கு தனியாக இருதய நோய்ப் பிரிவு, தீக் காயப் பிரிவு மற்றும் நரம்பியல் சிகிச்சைப் பிரிவு போன்றவற்றை அமைத்து, அம்மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியும் வழங்க வேண்டுகிறேன். அதேபோல அரசு இராணியார் மகப்பேறு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் கருவி அமைப்பதற்கும் அத்துடன் கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்வதன்மூலம் இந்த நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தலைமை அரசு மருத்துவமனையானது, தலைமை மருத்துவமனைக்குத் தேவையான தகுதிகளோடு அனைத்துப் பிரிவுகளும் தனித் தனிக் கட்டட வசதி மற்றும் நவீன வசதிகளோடு வெகு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அந்த மருத்துவமனையில் ஏதாவது கட்டட வசதிகளில் குறை இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதேபோன்று, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியைப் பொறுத்தவரையிலே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மட்டும் தற்போது உள்ளது. எதிர் வருகின்ற காலங்களில், தேவையைப் பொறுத்து புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் அதைப் பொருத்துவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, அவர்கள் இராணியார் மகப்பேறு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் கருவி வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இராணியார் மகப்பேறு மருத்துவமனையிலிருந்து 200 மீட்டர் தூரத்திலேயே உள்ள அரசு தலைமை மருத்துவமனையிலே சி.டி. ஸ்கேன் வசதி உள்ளதால் அதையே அவர்களும் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் காலங்களில் தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்

2013 ஏப்ரல் 26]

அவர்கள் குறிப்பிட்டதைப்போல இராணியார் மகப்பேறு மருத்துவமனைக்கும் அந்த சி.டி. ஸ்கேனை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், அவர் முன்வைத்திருக்கக்கூடிய அத்தனை கோரிக்கைகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையை இன்று மகத்தான துறையாக மாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் சார்பிலும், புதுக்கோட்டை மக்களின் சார்பிலும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

முற்பகல் 11–15

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். (குறுக்கீடுகள்) என்ன? யாராவது ஒருவர் மட்டும் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சவுந்தரராசன், திரு. பாலகிருஷ்ணன், யாராவது ஒருவர் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலை மாமல்லபுரத்தில் நடைபெற்ற வன்னியர் சங்க விழாவில் . . . (குறுக்கீடு)*